தென் இந்திய
வேளாங்கண்ணி யாத்திரை
அன்னை வேளாகண்ணி தொடக்கி எல்லா முக்கிய ஸ்தலங்களும் பத்து நாட்களில் தரிசித்துத் திரும்புவதற்கு சாப்பாடுஉட்பட செலவு 900/- ரூபா (இந்தியக்காசு) பாஸ்போர்ட், விஸா, அன்னியச் செலாவணி ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
உடன் தொடர்பு கொள்ளவும்
குட்வில் (T) ரவல்
Goowill Travel
No. 635, ஆஸ்பத்திரி வீதி,
[சிங்கள பாடசாலை முன்பாக]
யாழ்ப்பாணம்.



★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/89/5/78

மலர்: 21 வைகாசி: 7 ஜ-அகிர்: 23 இதழ்: 101
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 21-5-79



நியூகேம்பிறிட்ஜ் டியூடோறியல் இன்ஸ்ரிரியூட்
[திருநெல்வேலி சந்தி]
G. C. E. (A/L) 1980—1981
புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.
ஒவ்வொரு மாணவர்களும் தனித் தனி விரிவுரையாளர்களால் கவனிக்கப்படுவர்.

| பாடங்கள் | விரிவுரையாளர்கள் |
|---|---|
| இரசாயனம் | பாலன் Bsc Hons |
| பௌதிகம் | நூபன Bsc |
| விலங்கியல் | செல்வி ஆனந்தி Bse |
| தாவரவியல் | குகாதரன் Bsc Hons |
| தூயகணிதம் | நாயகம் Bsc |
| பிரயோக கணிதம் | நாதன் Bsc |

G. C. E. (O/L) மீட்டல் வகுப்பு 28-05-79 ஆரம்பம்.


# இந்திரா போட்டியிடமாட்டார்!

## எம். ஜி. ஆரை சந்தித்தபின்னர் திடீர் முடிவு!!

[புதுடில்லி]
அடுத்த மாதம் 17-ம் திகதி நடைபெறவிருக்கும் தஞ்சாவூர் [லோகசபை தொகுதி] இடைத் தேர்தலில், திருமதி இந்திராகாந்தி போட்டியிட மாட்டார்!

தஞ்சையில் திருமதி இந்திரா காந்தி போட்டியிட மாட்டார் என்று புதுடில்லியில் நேற்றுக் இந்திரா காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்றக் கமிட்டி முடிவு செய்திருப்பதாக இந்திரா காங்கிரஸின் மாநிலத் தலைவர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் நேற்று மாலை செய்தி நிருபர்களிடம் உத்தியோக பூர்வமாகத் தெரிவித்தார்.

"புதுடில்லி வந்திருந்த தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரன், திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்தார். இவர்களிருவரும் சுமார் ஒருமணிநேரம் வரை பேச்சு நடத்தினர். இதனைத் தொடர்ந்து, தஞ்சையில் திருமதி காந்தி போட்டியிடுவதில்லை என்று திடீர் முடிவு செய்யப்

[6ம் பக்கம் பார்க்க]

## பதட்டநிலை நீங்கியது

(வவுனியா)
வவுனியாவில் கடந்த மூன்று தினங்களாகக் காணப்பட்ட பதட்ட நிலை இப்பொழுது நீங்கிவிட்டதென்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸ் பாதுகாப்பு இங்கு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இங்கு நடைபெற்ற கட்சி மோதல்களின் போது நால்வர் கடுமையான வாள் வெட்டுக் காயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## "ஜனநாயகமுறையில் அமையவில்லையாம்"!
### சிறிமா குற்றச்சாட்டு

[கொழும்பு]
"விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல், ஜனநாயகமுறையில் அமையவில்லை'' என்று, உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியும் அத்தனகல எம். பியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா கருத்துவெளியீட்டிகையில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் "இத் தேர்தல் மூலம், அநாமதேய வேட்பாளர் ஒருவருக்கு தமது சுதந்திரமான வாக்கினை அளிக்க, மக்கள் நிர்ப்பந்திக்கப்படும் முறைக்கு தள்ளப்படுகின்றனர்'' என்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். [ம]

## நாவாந்துறையில் தற்காலிக பொலிஸ் நிலையம்

(யாழ்ப்பாணம்)
யாழ் மாநகரசபைத் தேர்தலைத் தொடர்ந்து நாவாந்துறையில் இரு கட்சி ஆதரவாளர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் பலத்த காயத்துக்குள்ளானசிலர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

த. ஜ. விஜரன், மஜேஜப் பிள்ளை அல்பிரட், திரவியம் செல்வக்குமார் ஆகியோரே பலத்த காயங்களுக்குள்ளானவர்களாவர், பத்துக்கதிர மானவர்கள் சிறுகாயமடைந்தனர்.

தற்போது நாவந்துறையில் ஏற்பட்டிருக்கும் பதட்ட நிலையைச் சமாளிக்கும்பொருட்டு அங்கு தற்காலிக பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டு பொலிஸ்காவல் பலப்படுத்தப்பட்டுள்ளது. இருகோஷ்டியினருக்குமிடையில் சமரசத்தை ஏற்படுத்த யாழ் எம். பி திரு. வெ. யோகேஸ்வரன் மேற்கொண்டிருந்தார்.

### உறுப்பினர் கைது

மேற்படி சம்பவம் சம்பந்தமாக யாழ் மாநகரசபை நாவாந்துறை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு அந்தோனிப்பிள்ளைமரியாம்பிள்ளை சந்தேகத்தின்மீது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார். மேலும் சுமார் பத்துப் பேர் சந்தேகத்தின் மீது பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களை யாழ் எம் பி. திரு. வெ. யோகேஸ்வரனும்,

[6ம் பக்கம் பார்க்க]

## அரசின் கொள்கைகளை மக்கள் ஏற்றுள்ளனர்!
### தேர்தல்முடிவுகுறித்து பிரதமர்கருத்து

(கொழும்பு)
'ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியையும், இடதுசாரி ஐக்கிய முன்னணியையும் மக்கள் இத் தேர்தல் மூலம் நிராகரித்து விட்டனர்' என்று பிரதமர் திரு. ஆர் பிரேமதாசா தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து வெளியிட்ட அறிக்கையில் கருத்து வெளியிட்ட .

அரசாங்கத்தின் கொள்கைகளையும் அபிவிருத்தித் திட்டங்களையும் மக்கள் பூரணமாக ஏற்றுள்ளனர் என்பதை இத் தேர்தல் முடிவு காட்டிவிட்டது' என்றும் தமது அறிக்கையில் பிரதமர் தெரிவித்துள்ளார். [ம]

## "தமிழீழ இலட்சியத்துக்கு கிடைத்த மகத்தானவெற்றி!
### அமிர் விடுக்கும் செய்தி

(யாழ்ப்பாணம்)
"உள்ளூராட்சிமன்றதேர்தல்களின் மூலம் முதல்தடவையாக, யாழ்ப்பாணம், திருமலை முதலான இடங்களிலுள்ள முஸ்லிம் மக்களின் ஆதரவு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு கிடைத்திருக்கிறது. இதனால், எமது கட்சியின் சார்பில் இவ்வுள்ளூராட்சி சபைகளில், முஸ்லிம் பிரதிநிதிகளும் தெரிவாகியுள்ளனர். இது எமது இயக்கத்தின் வருங்கால வளர்ச்சிக்கு நல்ல அறிகுறியாகும்"

இவ்வாறு, எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் தேர்தல் முடிவுகள் வெளியானதன் பின்னர் நேற்று அதிகாலை வெளியிட்ட அறிக்கையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

திரு. அ. அமிர்தலிங்கம் தமது அறிக்கையில் மேலும் தெரிவிப்பதாவது: "தமிழீழத்திலுள்ள 6 உள்ளூராட்சி மன்ற மாநகர, நகர சபைகளின் தேர்தல்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி மகத்தான வெற்றி பெற்றுள்ளது. தமிழ் ஈழம்தான் தமிழ் மக்களின் மாற்ற முடியாத இலட்சியமென்பதை இத்தேர்தல் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்து விட்டனர். சாதி, மத, பேதங்களை மறந்து. தமிழ் பேசும் மக்களின் கட்டளையை நிறைவேற்ற நாம் உழைப்போமென்று உறுதி கூறுகிறேன்'. (வெ)

## புலிப்படைத் திருத்தச் சட்ட மூலம் இன்று சமர்ப்பணம்!

[கொழும்பு]
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இதையொத்த வேறு அமைப்புகளுக்கும் தடைவிதித்தல் [திருத்தம்] சட்டமூலம், நீதியமைச்சர் திரு. கே. டபிள்யு தேவநாயகத்தால் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இதற்காக, வழக்கம்போல நாளை கூடவிருந்த பாராளுமன்றம் இன்று பிற்பகல் 3 மணிக்கு விசேஷமாக கூடுகிறது.

1978ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தமிழ்ஈழ விடுதலைப் புலிகளுக்கும், இதையொத்த வேறு அமைப்புகளுக்கும் தடைவிதிக்கும் சட்டமூலத்தைத் திருத்தவே புதிய [திருத்த] சட்டமூலம் இன்று சமர்ப்பிக்கப்படுகிறது.

1968ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி அமுலுக்குகொண்டு வரப்பட்ட [78ம் ஆண்டின் 16ம் இலக்க] சட்டம் இம் மாதம் 22ம் திகதியுடன் [நாளையுடன்] காலாவதியாகிறது இதன் காரணமாகவே புதிய திருத்தச்சட்ட மூலத்தை இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அன்றைய தினமே விவாதித்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [ம]

## யாழ். மாநகராட்சி மன்றம்:
## "ஐ. தே. கவின் தோல்வி பெருமகிழ்ச்சி தருகிறது"
### குமார் கருத்து

(யாழ்ப்பாணம்)
'யாழ் மாநகராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சி தோல்வி அடைந்தது பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது' என்று அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

'ஆதிக்க பலமும், பணபலமும் கொண்ட இருபெரும் கட்சிகளான தமிழர் விடுதலைக் கூட்டணியையும் ஐக்கிய தேசிய கட்சியையும் எதிர்த்து நின்று போட்டியிட வேண்டிய சூழ்நிலையில் காங்கிரஸ்

[6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

9 ஸ்ரீ வெள்ளை நிற 3 மீற்றர் 404 கார் றேடியோவுடன் விற்பனைக்குண்டு எந்நேரமும் பார்வையிடலாம். C. கனகையா, 64, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7239.

2492

கூடுதல் பயன்தரக்கூடிய நல்ல இன செவ்விளநீர் தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு. மில்க்வைற். யாழ்ப்பாணம். 2469

### யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை

**இந்து நாகரிகத்தில் பட்டப் பின் டிப்ளோமாநெறிக்குப் பதிவு செய்தல்--1979**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் தகுதிவாய்ந்த பட்டம் பெற்றவர்களிடமிருந்து மேற்கூறிய நெறிக்குப் பதிவுசெய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1979 ஜூன் 8ஆந் திகதியுடன் விண்ணப்பம் கோரப்படுவதற்கான இறுதிநாள் முடிவடையும். இதுபற்றிய மேலதிகத் தகவல்களுக்கும், விண்ணப்பப்படிவத்திற்கும் உங்கள் முகவரி கொண்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித மேலுறையை [9''×4''] உதவிப் பதிவாளர், கல்விக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

இது தொடர்பாக எனது 21-11-1978 விளம்பரத்திற்கிணங்க ஏற்கனவே மனுச்செய்தவர்கள் திரும்பவும் மனுச்செய்யத் தேவையில்லை.

பதிற் பதிவாளர்.

யாழ்ப்பாணம்.
1979-05-18 2502

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

பூநகரி, செட்டியகுறிச்சியைச் சேர்ந்த காலஞ்சென்ற சதாசிவம் குணரத்தினம் என்பவரின் மரண சாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

குணரத்தினம் கைம்பெண் மங்கையர்க்கரசி செட்டியகுறிச்சி, பூநகரி.

மனுதார்

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல. 188/T

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு வைகாசி மாதம் 30-ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி

வி. சிவசுப்பிரமணியம்,

பதிவாளர்.

1979-ம் ஆண்டு வைகாசி மாதம் 17-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

வரைந்தவர்:
வே. சு. நடராசா,
சட்டத்தரணி. 2489

### சோதிடம்

குறிப்பு பார்த்து பலன் கூறுவதின் மூலம், உங்கள் பிரச்சனைகள் (விவாகம், கல்வி, உத்தியோகம் தொழில் முதலியன) தீர்த்துவைக்கப்படும். KL. M. Krishnapillaiy, ஸ்ரீ ஆதிபராசக்தி சோதிட நிலையம், கந்தசுவாமி கோவிலடி, மாவிட்டபுரம். 2487

### உடுப்பிட்டிகிராமசபை கேள்வி விளம்பரம்

உடுப்பிட்டி கிராமசபை விசேட ஆணையாளரால் கீழ்க்காணும் வேலைகளுக்கு பதிவு செய்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து சில்வைத்த கேள்விகள் 7-6-79ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ரூபா 50/-வைப்புப்பணமாகவும் ரூபா 20/- பத்திரக்கட்டணமாகவும் 6-6-79ம் திகதி பிற்பகல் 3-00 மணிவரை எமது கிராம சபை அலுவலகத்தில் செலுத்தியதன்பேரில் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்

ஏனைய விபரங்கள் எமது கிராம சபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

வேலைகளின் விபரங்கள்

1. சக்கலாவத்தை ஆவரம்பிட்டி வீதி.
2. கரணவாய் தலைவாசல் வீதி.
3. கம்பாமலை கணற்தெரு வீதி.
4. கரணவாய் வடக்கு வைரவர் கோவில் வீதி.

ஒப்பம்
ஆ. குணநாயகம்,
விசேட ஆணையாளர்,
கிராம சபை உடுப்பிட்டி.

கிராம சபை அலுவலகம்,
உடுப்பிட்டி,
கரவெட்டி, 18-05-79. 2503

சென்னை

### இராமகிருஷ்ண மிஷன் அதிபருக்கு வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

சென்னை ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் சாரதாவித்தியாலய அதிபருக்கும் ஆசிரியைகளுக்கும் இன்று திங்கட்கிழமை மாலை கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி மண்டபத்தில் வரவேற்புபசாரம் நடைபெறவிருக்கிறது.

திருமதி இரத்தின நவரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்வுபசாரக் கூட்டத்தில் திருமதி கோகிலா காஸ்தி "தாய அன்னை ஸ்ரீ சாரதா தேவியாரின் தெய்வீக வாழ்வு" பற்றிச் சொற் [5ம் பக்கம் பார்க்க]

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழ. இல: 465

1. வல்லிபுரம் சண்முகராசாவும் பெண்
2. நாகேஸ்வரியும்
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

வாதிகள்

எதிராக

1. சின்னத்துரை நாகேசு
மஞ்சத்தடி தெற்கு, இணுவில்.

பிரதிவாதி

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் 465-ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1979-ம் ஆண்டு வைகாசி மாதம் 30-ந் திகதி (30-5-79) புதன்கிழமை 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை**

முதல் வட்டி 5900/- மேலும் 4000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10% வழக்கு அனைத்த திகதியாகிய 10-5-77ல் இருந்து முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5% வட்டியும் வழக்குச் செலவு ரூபா 582-60 சதம்.

**ஆதன இடாப்பு**

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று உரும்பிராயிலுறை "பண்டிக்தன்" பர. நில. இலா 15 இதில் பர. நில. இலா. $6\frac{1}{4}$ நீக்கி கிழக்குப் பக்கமாக பர நில. இலா. $6\frac{1}{4}$. இதில் வடக்குப்பக்கமாகப் பரப்பு நில. இலாச்சம் மூன்றுடன் எட்டில் ஒன்று (பர. நில. இல. 3 1/8) இந்தப் பரப்பு மூன்றுடன் எட்டில் ஒன்றுக்கும் எல்லை கிழக்கு கயிரன் தவஞானத்தின் ஆதனம், வடக்கு முருகேசு எதிர் நாயகத்தினுதனம், மேற்கு பொன்னம்பலம் அருளானந்தத்தினுதனம், தெற்கு சின்னத்துரை விஜயகுமாரியினுதனம் இன்னும் தெற்கு மிகுதியாதனத்தின் கிழக்கெல்லையருகால் இக்காணியிலிருந்து தெற்கேயிருக்கும் றோட்டுக்குப் போக்குவரவு செய்ய விடப்பட்ட பத்து அடி அகல நிலத்தால் பாதை பாவிப்புரித்தும் இதடங்கலும் (பதிவு கே. 308/11)

மு. விஜயராஜன்,
நீதிமன்ற விற்பனவு விலைமதிப்பாளையாளர்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,
4-5-79. 2499

யாழ். மத்திய கல்லூரி
யாழ்ப்பாணம்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

### அங்குரார்ப்பணக் கூட்டம்

காலம்: 02-06-79
நேரம்: காலை 10-00 மணி
இடம்: கல்லூரி மண்டபம்

பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

2497 அதிபர்.

# ராஜூ ஸ்ரோர்ஸ்

எங்களிடம்

இனிப்பு - குளிர்பானங்கள் - ஐஸ்கிறீம்-கேக் மற்றும் சாப்பாட்டுக்குத் தேவையான இறக்குமதிசெய்யப்பட்ட பழச் சத்துக்கள்- பழ ரசங்கள்-கலர் தினிசுகள்-நெற்குத்தும் மாவு அரைக்கும் இயந்திரங்கள்- அதன் உபஉறுப்புக்கள்- மின்சார மோட்டோர்கள்- மின்சார உபகரணங்கள்-விதம்விதமான விளையாட்டுச் சாமான்கள்- அன்பளிப்புப் பொருட்கள் - குழந்தைகளும், வளர்ந்தவர்களும் பாவிக்கத் தகுந்த பால்மாவுவகைகள் மற்றும் பலவித இறக்குமதி செய்யப்பட்ட பிஸ்கற் - சாய்ப்புச் சாமான் - கிளாஸ் - எனாமல்-அலுமினியம்- பிளாஸ்ரிக் சாமான்களும்


தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம்செய்யுங்கள்

## ராஜூ ஸ்ரோர்ஸ்

தபால்பெட்டி நிர்: 64

67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
போன் ) தந்தி)
372 ) ராஜூ)

# மேசன் வேலைக்கான சீமெந்து



## அதிக பட்சி

★ வேலை நயம்
★ குழைமம்
★ ஒட்டுந் தன்மை

### மேசன் வேலைக்கான சிமெந்து

மனை நிர்மாணத்துறையில் ஒரு நவீன அம்சமாகும். இது சிக்கனமானது, மலிவானது, அமெரிக்க சீமெந்துச் சங்கத்தின் நுணுக்கமான தர நிர்ணயத்துக்கு அமைவானது, இதனை போர்ட்லண்ட் சீமெந்தைப்போலவே பாவிக்கலாம். சீமெந்து / மணல் விகிதாசாரம் போர்ட்லண்ட் சீமெந்துக்குப் போலவேயாகும்.

மேசன் வேலைக்கான சீமெந்தைக் கொண்டு கட்டிடச் செலவைக் குறையுங்கள்.

● கொங்கிறீட் வேலைக்கு பயன்படுத்தப்படுவதற்கல்ல.

மேசன் வேலைக்கான சீமெந்தின் விலை 50 கி. கிரும் பை.

புத்தளம் அல்லது காங்கேசன்துறை தொழிற்சாலையிலிருந்து ரூபா 14/90

காலி தொழிற்சாலையிலிருந்து ரூபா 17/80

## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்,

தபால் பெட்டி - 1382, சுதந்திர சதுக்கம்,
கொழும்பு—7. தொலைபேசி: 95628 95801—4

# பத்தாண்டுகளின்பின் நடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல்!

## மக்கள் தீர்ப்பு!

பத்து ஆண்டுகளின்பின் நமது நாட்டில் ஒரு குட்டிப் பொதுத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது.

மட்டக்களப்பு, பொலநறுவை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஒன்பது மாநகர சபைகளுக்கும் முப்பத்திநான்கு நகர சபைகளுக்கும் புதிய விகிதாசார முறைப்படி இத்தேர்தல் நடைபெற்றது.

வவுனியாவிலும் வல்வெட்டித்துறையிலும் நடைபெற்ற இரண்டொரு சிறு சம்பவங்களைத் தவிர இத்தேர்தல் மிக அமைதியாக நிறைவேறியிருக்கிறது.

இச்சம்பவங்களும் கூடப் பெரிதாகாமல் மிகுந்த கவனத்துடனும் நிதானத்துடனும் நடந்துகொண்ட பொலிசார் பாராட்டுக்குரியவர்கள். தேர்தல் அமைதியாக நடைபெறுவதற்கு ஒத்துழைத்த வேட்பாளர்களையும் அரசியல் கட்சியினரையும் பொதுமக்களையும் போற்றவேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் தேர்தல நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களனைத்தையும் ஐக்கிய தேசியக் கட்சி தனது நிர்வாகத்தில் எடுத்துள்ளது வடக்கிலும் கிழக்கிலும் (திருக்கோணமலையில்) ஒரு மாநகர சபையையும் ஐந்து நகர சபைகளையும் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது நிர்வாக ஆளுகைக்குள் எடுத்துள்ளது.

1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கிலும், தெற்கிலும் வீசிய அதேஅலைதான் இன்னமும் வீசுகின்றதென்றே சொல்ல வேண்டும்.

அரசாங்கத்தின் கொள்கையை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்களென்பதை இந்தக் குட்டிப் பொதுத்தேர்தல் நிரூபித்துவிட்டதென்று ஐக்கிய தேசியக்கட்சியும் தமிழ்மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கையையே இன்னமும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதையே இத்தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றதென்று கூட்டணியும் வாதிடக்கூடும்.

இதற்கு ஆதாரமாக இருதரப்பினரும் வாக்கு விகிதங்களையும் புள்ளிவிபரங்களையும் எடுத்து விளக்கவும் முன்வரலாம். வடக்கில் ஐக்கிய தேசியக்கட்சிபெற்ற வாக்குகளையும் அரசாங்கம் தனது வாதத்துக்கு ஆதாரமிகாட்ட முன்வரலாம்.

இவற்றினால் நாட்டின் பிரச்னைகளைத் தீர்த்து அமைதியையும் ஐக்கியத்தையும் நிலைநாட்டிவிட முடியாது.

உண்மை நிலையை உணர்ந்து இருதரப்பினரும் சந்தித்துப்பேசி இதர அரசியல் கட்சிகளுடனும் கலந்தாலோசனை செய்து ஒரு சுமுகமான நிரந்தரமான தீர்வுக்கு வழிகாண அரசுமுன் வருவதே விவேகமாகும்

ஆண்டவனை அடையப் பாண்டித்தியம் தேவையில்லை மனத்தூய்மையும், பக்தியுமே தேவை.

— சுவாமி சிவானந்தர்

கடந்த பத்தாண்டுகளின் பின்நேற்று முன்தினம் 34 நகர சபைகளுக்கும் 9 மாநகரசபைகளுக்கும் நாடுமுழுவதிலும் நடந்த "குட்டிப்பொதுத் தேர்தலில்" ஐக்கிய தேசியக் கட்சி தென்னிலங்கையிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு கிழக்கு மாகாணத்திலும் அமோக வெற்றியீட்டியிருக்கின்றன. கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர் நடைபெறவில்லை. திருக்கோணமலை நகரசபைக்கு நடந்ததேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியே நகரசபை நிர்வாகத்தைக் கைப்பற்றியிருக்கிறது.

1956ம் ஆண்டின் பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதல் தடவையாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்களை நிறுத்தி மூவரை வெற்றி பெறச் செய்திருப்பதுடன் ஐயாயிரத்துக்குமதிகமான வாக்குகளை அது பெற்றிருப்பதும் ஆளும் கட்சியான அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஒரு சாதனைதான்! சாவகச்சேரி நகரசபைக்கு இரண்டு ஐக்கிய தேசியக்கட்சியினரும் பருத்தித்துறைத் தொகுதியில் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டிருப்பது கூட்டணியைப் பொறுத்தவரையில் கவலையளிப்பதாகும்.

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் மொத்தம் 47 ஸ்தானங்களில் ஐக்கிய தேசியக் கட்சி 35 ஸ்தானங்களைப் பெற்றுள்ளபோதிலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மிகுதி பன்னிரண்டு ஸ்தானங்களையும் கைப்பற்றியிருப்பது ஐக்கிய தேசியக்கட்சிக்குஅதிக மகிழ்ச்சியளிக்கமுடியாது. கொழும்பு மாநகரசபைக்கு ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து திரு ஸ்ரீகாந்தா தம்பிப்பிள்ளையும் திரு. முத்துக்குமாரசாமி மகேந்திரராஜாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன, லங்கா சமசமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன கட்சிப்பெயர்களில் போட்டிக்கு நின்றன. ஜனதா விமுக்திப் பெரமுனை (மக்கள் விடுதலை முன்னணி) யைத் தேர்தல் ஆணையாளர் அரசியல் கட்சியாக அங்கீகரிக்காததால் அக்கட்சியின் வேட்பாளர்கள் உபதிஸ்ஸ கமநாயகா தலைமையில் சுயேச்சைக்குழுவாகப்போட்டியிட்டு லங்காசமசமாஜக்கட்சி, மகாஜன எக்சத் பெரமுன ஆகிய பழம்பெரும் கட்சிகளை விடக்கூடுதலான வாக்குகளைப் பெற்றிருக்கின்றனர். மாநகர சபையில் ஒரு ஸ்தானம் கூடக் கிடைக்காவிட்டாலும் கட்சி ரீதியில் மூன்றாவது ஸ்தானத்தை இந்தக்குழுபிடித்திருக்கிறது.

கொழும்பு மாநகரசபைத் தேர்தல் முடிவும் மற்றும் சில உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளும் இங்கு தரப்படுகின்றன.

## ஐக்கியதேசியக் கட்சியும், கூட்டணியும்!

### கொழும்பு [மாநகரசபை] 47

| | |
|---|---|
| மொத்தவாக்காளர் | 2,94,813 |
| வாக்களித்தோர் தொகை | 1,92,788 |

| கட்சிகள் | வாக்குகள் | ஸ்தானங்கள் |
|---|---|---|
| ஐ. தே.க. | 1,19,782 | 35 |
| சு. க. | 42,734 | 12 |
| சுயேச்ச | 14,505 | 00 |
| ல. ச. ச. க | 13,861 | 00 |
| மகா. எக்சத் பெரமுன | 1,908 | 00 |

### கண்டி [மாநகரசபை-23]

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | 48,213 |
| வாக்களித்தோர் தொகை | 35,535 |

| கட்சிகள் | வாக்குகள் | ஸ்தானங்கள் |
|---|---|---|
| ஐ. தே. க. | 18,667 | 14 |
| சு. க. | 13,398 | 09 |
| ல, ச. ச. க. | 151 | 00 |
| சுயே (1) | 423 | 00 |
| சுயேச்சை (2) | 1896 | 00 |

சி. ரத்நாயக்கா (மேயர்) சந்திரசரணராஜ (உதவிமேயர்)

### தெஹிவளை-கல்கிசை (மாநகரசபை-29)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ.தே.க. | 34,783 | 19 |
| சு. க. | 21,943 | 10 |
| ல.ச.ச. க | 4,167 | 00 |
| ம.எக்.பெரமுன | 891 | 00 |

எம். ஏ. ராஜா வீரசிங்க [தலைவர்]

### சிலாபம் நகரசபை-11

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 5,512 | 08 |
| சு க | 2,165 | 03 |
| ல ச ச க | 375 | 00 |

எம் ஏ டக்ளஸ் பெர்ணாண்டோ [தலைவர்]

### களுத்துறை நகரசபை-11

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 6,245 | 06 |
| ல ச ச க | 3,676 | 03 |
| சு க | 3,134 | 02 |
| சுயே | 171 | 00 |

ஆர் ஜி ஏ பெரேரா [தலைவர்]

### ஹொறணை (நகரசபை-7)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 1,943 | 4 |
| சு. க. | 1,447 | 2 |
| சுயே. | 9'3 | 1 |

டி கே குணசேகர [தலைவர்]

### ஹட்டன்-டிக்கோயா (நகரசபை-7)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே.க. | 1,900 | 05 |
| சு க | 883 | 02 |
| சுயே. | 388 | 09 |

ஈ ஏ பாயோ [தலைவர்], எஸ் ராஜு [உபதலைவர்]

### காலி (மாநகரசபை-15)

| கட்சி | வாக்குகள் | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 14,513 | 10 |
| சுயேச்சை | 9,968 | 05 |
| சு க | 3,841 | 00 |
| ல ச ச க | 3,210 | 00 |

ஜி ஏ குஸ்லெவ் [மேயர்], எம் இஸத்அலி [உதவிமேயர்] சுயேச்சைக்குழுவில் போட்டியிட்ட டாக்டர் டபிள்யு தகநாயக்காவும் தெரிவு செய்யப்பட்டார்.

### கொலன்னுவ நகரசபை-11

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 8,235 | 08 |
| சு க | 4,561 | 03 |
| ல ச ச க | 1,423 | 00 |
| ம ஏ பெ | 155 | 00 |

எம் டி பி சமரநாயக்கா (தலைவர்)

### அம்பலாங்கொடை (நகரசபை-12)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 4,522 | 07 |
| சு க | 2,868 | 04 |
| ல ச ச க | 1,101 | 00 |

டபிள்யூ. ஓ ஆனந்த டி சில்வா [தலைவர்]

### கோட்டே (நகரசபை-10)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 19,605 | 07 |
| சு க | 12,441 | 03 |
| கம்யூ | 2,868 | 00 |

எஸ். ஹியூபர்ட் குரே (தலைவர்)

### கம்பளை (நகரசபை-12)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ. தே. க. | 6,604 | 10 |
| சு. க. | 1,686 | 02 |

ஆர். ஆர். டயஸ் பண்டார நாயக்கா (தலைவர்)

### மொறட்டுவ (நகரசபை-12)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ.தே.க. | 23.974 | 08 |
| சு.க. | 14,073 | 04 |
| ல ச ச க | 4,162 | 00 |
| சுயே (2) | 3,667 | 00 |
| சுயே (3) | 422 | 00 |
| சுயே (1) | 257 | 00 |

குஸாந்த சிறிரத்ன (தலைவர்)

### பேருவளை (நகரசபை-8)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 5,907 | 06 |
| சு க | 3,192 | 02 |
| ல ச ச | 635 | 00 |

ஏ டபிள்யு எம் ஆர் மரிக்கார் [தலைவர்]

### அவிசாவளை (நகரசபை-11)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 3,739 | 08 |
| ம ஏ பெ | 1,422 | 02 |
| சு க | 769 | 01 |

எஸ். ஜே. செனவிரத்ன (தலைவர்)

### புத்தளம் (நகரசபை-9)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 3,573 | 6 |
| சு க | 3,488 | 3 |
| கம்யூ | 371 | — |

ஜனாப் இப்ராஹிம் ஹாசிம் தலைவராவார்

### நாவலப்பிட்டி (நகரசபை)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 2,942 | 6 |
| சு க | 1,184 | 2 |
| ல ச ச க | 194 | — |

எஸ் ஐவ மொகமட் தலைவராவார்

### தங்காலை (நகரசபை-5)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 2,159 | 4 |
| சு க | 1,315 | 1 |
| சுயேச்சை | 643 | — |
| கம்யூ. | 210 | — |

ஜோன் சில்வா எதிரிசூரிய [தலைவர்]

### மினுவாங்கொட (நகரசபை-11)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ. தே. க. | 1,384 | 7 |
| சு க | 1,171 | 4 |
| ல ச ச | 200 | — |
| சுயே | 319 | — |

டொன் எஸ் ஜெயசிங்கா [தலைவர்]

### பாணந்துறை நகரசபை-9

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 5,190 | 05 |
| ல ச ச க | 3,974 | 03 |
| சுயே (1) | 2,222 | 01 |
| சு க | 1,479 | 00 |
| சுயே (2) | 281 | 00 |

ஜே ஜே சத்தரே [தலைவர்]

### பலாங்கொடை (நகரசபை-9)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 2,275 | 08 |
| சு க | 1,175 | 02 |
| கம்யூ | 402 | 00 |

ஏ. பெர்ணாண்டோ [தலைவர்]

[4ம் பக்கம் பார்க்க]

## மக்கள் கருத்து

### பரீட்சைத் திணைக்களத்தின் வஞ்சனை

1978ம் ஆண்டு சித்திரை மாதம் நடைபெற்ற க. பொ. த. ப. (உயர்) பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியதையடுத்துப் பெறுபேற்றில் திருப்தி கொள்ளாதவர்கள் அதனை மீளாய்வு செய்வதற்காக மேற்படி திணைக்களத்தினர் வழங்குகின்ற சந்தர்ப்பத்தை நானும் பயன்படுத்தும் பொருட்டு அவர்களது விதிமுறைகளுக்கமைய ஒரு பாடத்திற்கு (அளவையியல், மீளாய்வு செய்யுமாறு கோரி விண்ணப்பித்திருந்தேன். ஆனால் ஏழு மாதங்களுக்கு மேலாகியும் இன்னும் முடிவு கிடைக்கவில்லை. என்னைப்போல் மனுச் செய்தவர்களுக்கு இதற்குரிய முடிவு இரு மாதங்களுக்கு முன்னதாகவே கிடைத்துவிட்டது. இந்நிலையில் எனது நிலையை அறிய ஆவலடைந்த நான் பொறுமையைக் கடைப்பிடித்தபின் 9-4-79, 20-4-79 ஆகிய திகதிகளில் முறையே தந்தி, ஞாபகார்த்தக் கடிதம் என்பவற்றின்மூலம் மீளாய்வு முடிவு கிடையாததமையைத் தெரியப்படுத்தினேன். ஆனால் இன்றுவரை முடிவு கிடைக்கவில்லை. இந்நிலை பரீட்சைத் திணைக்களத்தின் போக்கில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதுடன் இனிமேல் மீளாய்வு செய்வதற்குப் பணத்தையும் நேரத்தையும் செலவு செய்வது புத்திசாலித்தனமானதொரு நடவடிக்கையல்ல என்பதையும் வலியுறுத்துகின்றது.

க. சண்முகநாதன்.
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

# யாழ். மாநகரசபை தேர்தல்: வாக்களிப்பு விபரம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தலில் வட்டாரங்கள் ரீதியாக வாக்களிப்பு நிலையங்களில் எண்ணி அறிவிக்கப்பட்ட வாக்களிப்பு விபரங்கள் இங்கு தரப்படுகின்றன.

(1) இல: (டி)
புனித ஜேம்ஸ் ம.வித்தியாலயம் (பெண்கள்)

| | |
|---|---|
| ஐ தே க | 22 |
| த வி கூ | 627 |
| கம்யூனிஸ்ட் | 04 |
| த காங்கிரஸ் | 1154 |

(2) இல: (பி)
மத்திய கல்லூரி யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| ஐ தே க | 117 |
| த வி கூ | 485 |
| கம்யூனிஸ்ட் | 03 |
| த காங்கிரஸ் | 165 |
| மொத்தம் | 770 |
| கழிவு | 02 |

(3) வண்ணார்பண்ணை மசுறுதீன் தமிழ்க் கலவன்பாடசாலை

| | |
|---|---|
| ஐ தே க | 354 |
| த வி கூ | 897 |
| கம்யூனிஸ்ட் | 15 |
| த காங்கிரஸ் | 158 |
| மொத்தம் | 1167 |
| கழிவு | 04 |

(4) புனிதஜேம்ஸ் (ஆண்கள்)

| | |
|---|---|
| ஐ தே க | 14 |
| த வி கூ | 251 |
| கம்யூனிஸ்ட் | 02 |
| த காங்கிரஸ் | 194 |
| மொத்தம் | 461 |

(5) இலக்கம்(என்)
யாழ்.கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்

| | |
|---|---|
| ஐ தே க | 108 |
| த வி கூ | 562 |
| கம்யூனிஸ்ட் | 10 |
| த காங்கிரஸ் | 124 |
| மொத்தம் | 805 |
| கழிவு | 01 |

(6) இல:எல்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

| | |
|---|---|
| ஐ தே க | 86 |
| த வி கூ | [770 |
| கம்யூனிஸ்ட் | 21 |
| த காங்கிரஸ் | 271 |
| மொத்தம் | 1711 |
| கழிவு | இல்லை |

(7) இல: (வை)
ஒஸ்மானியாக் கல்லூரி

| | |
|---|---|
| ஐ தே க | 435 |
| த வி கூ | 351 |
| கம்யூனிஸ்ட் | 07 |
| த காங்கிரஸ் | 200 |

(8) இல: (ஏ ஏ)
இந்துமகளிர்கல்லூரி

| | |
|---|---|
| ஐ தே க | 18 |
| த வி கூ | 647 |
| கம்யூனிஸ்ட் | 24 |
| த காங்கிரஸ் | 296 |
| மொத்தம் | 986 |

(9) இல.(பி.பி)
சைவபரிபாலன சபை மண்டபம்
[நாவலர் மண்டபம்]

| | |
|---|---|
| ஐ தே க | 57 |
| த வி கூ | 869 |
| கம்யூனிஸ்ட் | 20 |
| த காங்கிரஸ் | 131 |
| கழிவு | 04 |

(10) இல:(சி.சி)
யாழ்.இந்துக் கல்லூரி

| | |
|---|---|
| ஐ தே க | 41 |
| த வி கூ | 645 |
| கம்யூனிஸ்ட் | 09 |
| த காங்கிரஸ் | 298 |
| மொத்தம் | 992 |
| கழிவு | 01 |

(11) இல:
பெரியபுலம் மெதடிஸ்த மிஷன் த.க.பாடசாலை

| | |
|---|---|
| ஐ தே க | 11 |
| த வி கூ | 813 |
| கம்யூனிஸ்ட் | 14 |
| த காங்கிரஸ் | 349 |
| மொத்தம் | 1192 |
| கழிவு | 05 |

(12) இல: (ஐ)
யாழ். புனிதறெக்ஸ் றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை

| | |
|---|---|
| ஐ தே க | 232 |
| த வி கூ | 708 |
| கம்யூனிஸ்ட் | 117 |
| த காங்கிரஸ் | 167 |
| மொத்தம் | 1204 |

(13)இல:(யூ)
யாழ்.சன்மார்க்க சங்க சனசமூக நிலையம்

| | |
|---|---|
| ஐ தே க | 96 |
| த வி கூ | 620 |
| கம்யூனிஸ்ட் | 10 |
| த காங்கிரஸ் | 86 |
| மொத்தம் | 820 |
| கழிவு | இல்லை |

(14) இல:(ஓ)
கொழும்புத்துறைஇந்து மகாவித்தியாலயம்

| | |
|---|---|
| ஐ தே க | 53 |
| த வி கூ | 842 |
| கம்யூனிஸ்ட் | 09 |
| த காங்கிரஸ் | 111 |
| மொத்தம் | 1017 |
| கழிவு | 02 |

(15) இல (ஏ)
அரசாங்க மிருக வைத்தியசாலை பண்ணை

| | |
|---|---|
| ஐ தே க | 114 |
| த வி கூ | 505 |
| கம்யூனிஸ்ட் | 28 |
| த காங்கிரஸ் | 68 |
| மொத்தம் | 715 |
| கழிவு | இல்லை |

(16)இல: (ரி)
யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயம்

| | |
|---|---|
| ஐ தே க | 65 |
| த வி கூ | 777 |
| கம்யூனிஸ்ட் | 32 |
| த காங்கிரஸ் | 185 |
| மொத்தம் | 1062 |
| கழிவு | 06 |

(17) இல: (ஈ)
உத்தரிய மாதா மண்டபம்

| | |
|---|---|
| ஐ தே க | 221 |
| த வி கூ | 343 |
| கம்யூனிஸ்ட் | 01 |
| த காங்கிரஸ் | 300 |
| மொத்தம் | 868 |
| கழிவு | 02 |

(18) இல: (கே)
கொழும்புத்துறை சந்தனமாதா கோவில்

| | |
|---|---|
| ஐ தே க | 25 |
| த வி கூ | 555 |
| கம்யூனிஸ்ட் | 09 |
| த காங்கிரஸ் | 186 |
| மொத்தம் | 778 |
| கழிவு | 03 |

(19) இல: (டபிள்யூ)
வண்ணார்பண்ணை தமிழ்க் கலவன் பாடசாலை

| | |
|---|---|
| ஐ தே க | 354 |
| த வி கூ | 297 |
| கம்யூனிஸ்ட் | 15 |
| த காங்கிரஸ் | 159 |
| மொத்தம் | 1167 |
| கழிவு | 04 |

(20) இல: (எவ் எவ்)
யாழ். இந்துக் கல்லூரி தமிழ்க் கலவன் பாடசாலை

| | |
|---|---|
| ஐ தே க | 17 |
| த வி கூ | 658 |
| கம்யூனிஸ்ட் | 41 |
| த காங்கிரஸ் | 68 |
| மொத்தம் | 784 |
| கழிவு | இல்லை |

(21) இல: (எக்ஸ்)
யாழ் நாவாந்துறை றோமன்க.த.க.பாடசாலை

| | |
|---|---|
| ஐ தே க | 250 |
| த வி கூ | 530 |
| கம்யூனிஸ்ட் | 24 |
| த காங்கிரஸ் | 336 |
| மொத்தம் | 1500 |
| கழிவு | 8 |

(22) இல: (எஸ்)
அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை

| | |
|---|---|
| ஐ தே க | 108 |
| த வி கூ | 592 |
| கம்யூனிஸ்ட் | 23 |
| த காங்கிரஸ் | 34 |
| மொத்தம் | 1011 |
| கழிவு | 02 |

(22) இல: (வை)
கதிஜா மகாவித்தியாலயம் (பெண்கள்)

| | |
|---|---|
| ஐ தே க | 406 |
| த வி கூ | 353 |
| கம்யூனிஸ்ட் | 14 |
| த காங்கிரஸ் | 143 |
| மொத்தம் | 1450 |
| கழிவு | 02 |

[5ம் பக்கம் பார்க்க]

# அரசஅதிபருக்கு பொதுப்பிரியாவிடை

## யாழ். நகரில் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணுண்டோ கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச்செல்வதையிட்டு யாழ் மக்கள் தமது வருத்தத்தையும் அதேசமயம் அவர் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து மக்களுக்குத் தமது பாகுபாடற்ற சேவையைத் தொடர்ந்து செய்யவேண்டுமென்று வாழ்த்தியும் யாழ். மக்களின் நினைவு என்றும் அவர் நெஞ்சைவிட்டு அகலாத பொதுப் பிரியாவிடையொன்றை இம்மாத முடிவுக்குள் யாழ்நகரில் வைப்பதற்கான முயற்சிகளில் சில பிரமுகர்களும் சாதாரண பொது மக்களும் ஈடுபட்டுள்ளனர்.

திரு. வேர்ணன் அபயசேகரா யாழ். அரசாங்க அதிபராக இருந்து மாற்றம் பெற்றுச் சென்றபோது யாழ். நகர மண்டபத்தில் பொதுமக்கள் பெருமளவில் திரண்டு அவருக்குப் பிரியாவிடை அளித்ததை நினைவுகூர்ந்து அதையும் விடச் சிறந்தமுறையில் திரு. லயனல் பெர்ணுண்டோவுக்குப் பிரியாவிடை அளிக்க வேண்டுமென்று அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிகிறது.

வாடகைக்கார்ச் சாரதிகள், வர்த்தகர்கள், அரசாங்க ஊழியர்கள், பஸ் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் இந்த ஏற்பாட்டிற்கு ஒத்துழைப்பு அளிக்கமுன்வந்துள்ளனர்.

திரு. லயனல் பெர்ணுண்டோ இம்மாத முடிவில் இடமாற்றம் பெற்றுச் செல்கிறார். அவர் அநேகமாக வர்த்தக அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலாளராகப் பதவியேற்பாரென்று தெரிகிறது.

பத்து......

[3ம் பக்கத் தொடர்ச்சி]

### வெலிகம
(நகரசபை-10)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 6,366 | 8 |
| சு க | 2,161 | 2 |

ஏ டபிள்யூ ஜி ஜயசேன [தலைவர்] அப்துல் ஹரீம் மஹ்ரூப் [உபதலைவர்]

### அம்பாறை
(நகரசபை-9)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க. | 3,216 | 06 |
| சு. க. | 2,050 | 03 |
| கம்யூ. | 123 | — |

ஏ. பி. கே. சந்திரதாச தலைவராவார்.

### அம்பாந்தோட்டை
(நகரசபை-7)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ. தே. க. | 2,825 | 6 |
| சு. க. | 734 | 1 |

முகமட் நியால் தாஸிம் [தலைவர்], முகமட் சாம் மஹ்ரூப் [உபதலைவர்].

### குருநாகல்
(மாநகரசபை-12)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 6,574 | 10 |
| சு க | 2,181 | 02 |
| கம்யூ | 203 | — |
| சுயேச்.[1] | 210 | — |
| சுயேச்.[2] | 322 | — |

ஏ பி றெக்கால [தலைவர்]

### கம்பஹா
(நகரசபை-7)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே.க. | 2,450 | 05 |
| சு. க. | 1.749 | 02 |
| கம்யூ. | 224 | — |

எச். எல். விக்கிரமதிலக (தலைவர்)




மிளகாய்
இலைச் சுருளை தடுக்கிறது
விளைச்சலை அதிகரிக்கிறது
'அக்டெலிக் 50'




பாவிக்கும் முறை
4-6 கலன் நீரில் 1 திரவ அவு. 'அக்டெலிக் 50' கலந்து 10 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்கவும்.

மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்க,
CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்,
4-ம் மாடி,ஹேமாஸ் கட்டடம் கொழும்பு 1.

நாகம்மாள்
(கன்னாகம்)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
ஒருதாய் மக்கள்

Rio (Jaffna) Phone: 7607
Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
Jim Brown in
SLAUGHTERS BIG RIP OFF
(Adults only)

21-வது வாரம்
வின்சர் (யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(சிங்களக் கலர்)

ராஜா (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா, சௌகார்ஜானகி நடித்த
ஈஸ்ட்மன் கலர்
ஒளிவிளக்கு
புதிய பிரதி

SHANTHI JAFFNA 3rd CROWDED WEEK!
Daily: 10-30, 2-30, 6-30 & 9-45
Rajenrakumar—Hema Malini—Bhaanukeka
"GORA AUR KALA"
Full of Action Packed Film
Hindi, — in Eastman Colour
Music: Luxmikhant Pyarelal
Play Back: Latha Mangesgar, Asha Bostle, Mohamed Rafi.
"கோரா அவுர் காலா" — ஹிந்தி — கலர்

REGAL (Jaffna) Daily 4-30, 7-00 & 9-30 p.m. only
PERCY'S PROGRESS
(Color) (Adult Only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30, 6-15 9-30
THE TOWERING INFERNO
த டவரிங் இன்பேர்னோ

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி: 2-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு 10-30, 2-30 6-30 & 9-45
ஜெமினி—பத்மினி
வீராங்கனை (புதிய பிரதி)

லிடோ (யாழ்.நகர்)
போன்: 7°9? தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—பத்மினி
வியட்நாம் வீடு

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
காந்தராவ் - மாலினி வரலக்ஷ்மி நடித்த
ஜெய்பவானி
(புதிய பிரதி)
22-5-79 முதல்
கோமாதா என் குலமாதா

ராணி (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஃ டொன் பொஸ்கோ ஃ காஞ்சனா
ஃ செல்வசேகரன் ஃ ஜவாகர்
ஃ ஜெயதேவி ஃ ஏகாம்பரம்
ஃ மணிமேகலை ஃ தர்மலிங்கம்
இன்னும் பலர் திறம்பட நடித்த
எங்களில் ஒருவன்


# இன்றைய பலன்

வைகாசி மாதம் 7-ம் திகதி
திங்கட்கிழமை
(21-5-1979)

**மேடம்:** புதிய தம்பிடி தலைதூக்கும், மாணவர்கள் உணர்ச்சி வசப்படாதிருக்கவும்.

**இடபம்:** அந்தஸ்தில் உயர்வு தென்படும், எதிர்பார்த்த பதவி உயர்வுக்கு இன்று முன்னோடி நடவடிக்கை எடுக்கப்படும்.

**மிதுனம்:** சொந்தமாகத் தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும், எதிலும் முன்னணியில் நிற்பீர்கள்.

**கடகம்:** இதயத்தில் இனிமை தவழும், பகைவர்கள் பணிவர், பரந்த நோக்குடன் செயற்படுவதன் மூலம் பொதுமக்களின் பாராட்டும் கிடைக்கும்.

**சிங்கம்:** ஆயுத பீடைக்கு இடமுண்டு, அவதானம் விரும்பத்தக்கது, அவசரப் போக்கு அனர்த்தங்களுக்கு இடமளிக்கும், புத்தியுடன் நடந்து கொள்ளவும்.

**கன்னி:** ஒளிமயமான சூழ்நிலை இன்று தென்படும், குடும்பத்தில் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும், காதலர்கள் மத்தியில் இனிமை தவழும்.

**துலாம்:** பிரச்சினைகள் மேலும் சிக்கலாகும், உணவு விடயத்தில் விருப்பக்குறைவு காணப்படும், உடல் நலனைப் பேணி நடக்கவும்.

**விருச்சிகம்:** மனதிற்கு மகிழ்ச்சிதரும் செய்திக்கு இடமுண்டு, இறைபக்தி பெருகும், நீண்டநாள் மனக்குறை இன்று நிவிர்த்தியாகும்.

**தனுசு:** தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கைப் பெருக்கும்.

**மகரம்:** முக்கியமான சந்திப்பு ஒன்று இன்று கிடைக்கலாம், முதியவர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும், இன்று பொன்னான நாள்.

**கும்பம்:** பணம் பறிபோவதற்கு இடமேற்படலாம், முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

**மீனம்:** பொறியியலாளர்களுக்கு இன்று பொன்னான நாள், பூமி விவகாரங்களில் இன்று நல்ல முடிவு ஏற்படும், நிதானம் வேண்டும்.

சோதிடகேசரி
திருமலை க. வேலுப்பிள்ளை

## இராமகிருஷ்ண...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பொழிவாற்றுவார். மற்றும் பஜனை, இசைவிருந்து என்பனவும் நிகழும்.

நாளை செவ்வாய்க்கிழமை மாலை குரும்பசிட்டி சன்மார்க்க சபை இவர்களை வரவேற்கும்.


வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-ராதாசலூஜா
இதயக்கனி

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


# யாழ். மாநகரசபை . . .

(4ம் பக்கத் தொடர்ச்சி)

(24) இல, (ஈ ஈ)
கலட்டி மெதடிஸ்த
மிஷன்க.த. . பாடசாலை

| | |
|---|---|
| ஐ தே க | 28 |
| த வி கூ | 1037 |
| கம்யூனிஸ்ட் | 87 |
| த காங்கிரஸ் | 238 |
| மொத்தம் | 1399 |
| கழிவு | 15 |

(25) இல: (வீ)
செங்குந்தா
வித்தியாலயம்

| | |
|---|---|
| ஐ தே க | 79 |
| த வி கூ | 950 |
| கம்யூனிஸ்ட் | 35 |
| த காங்கிரஸ் | 166 |
| மொத்தம் | 1690 |
| கழிவு | 09 |

(26) இல: (வை)
கந்தர்மடம்
சைவப்பிரகாச
வித்தியாசாலை

| | |
|---|---|
| ஐ தே க | 211 |
| த வி கூ | 1005 |
| கம்யூனிஸ்ட் | 45 |
| த காங்கிரஸ் | 50 |
| மொத்தம் | 1317 |
| கழிவு | 06 |

(27) இல:
பாஷையூர்
புனித அந்தோனியார்
றோ. க. த. க. பெ.
பாடசாலை

| | |
|---|---|
| ஐ தே க | 139 |
| த வி கூ | 946 |
| கம்யூனிஸ்ட் | 06 |
| த காங்கிரஸ் | 582 |
| மொத்தம் | 1679 |
| கழிவு | 06 |

(28) இல: (எக்ஸ்)
நல்லூர் சட்டநாதர்
கோவில் தற்காலிக
கொட்டகை

| | |
|---|---|
| ஐ தே க | 151 |
| த வி கூ | 1146 |
| கம்யூனிஸ்ட் | 36 |
| த காங்கிரஸ் | 118 |
| மொத்தம் | 2350 |
| கழிவு | 07 |

(29) இல: டபிள்யூ
நல்லூர் ஸ்தாறு
இலங்கை கிறிஸ்தவ
த. க. பாடசாலை

| | |
|---|---|
| ஐ தே க | 120 |
| த வி கூ | 1067 |
| கம்யூனிஸ்ட் | 14 |
| த காங்கிரஸ் | 96 |
| மொத்தம் | 1299 |
| கழிவு | 02 |

30. இல: ரி
நல்லூர் மகேஸ்வரி
வித்தியாசாலை

| | |
|---|---|
| ஐ தே க | 97 |
| த வி கூ | 1262 |
| கம்யூனிஸ்ட் | 19 |
| த காங்கிரஸ் | 55 |
| மொத்தம் | 1444 |
| கழிவு | 11 |

31. இல: சீ
சென். ஜேம்ஸ்
றோமன் க. த. க.
பாடசாலை

| | |
|---|---|
| ஐ தே க | 14 |
| த வி கூ | 251 |
| கம்யூனிஸ்ட் | 02 |
| த காங்கிரஸ் | 194 |
| மொத்தம் | 464 |
| கழிவு | 03 |

32 இல: இசற்
ஆனைப்பந்தி
மெதடிஸ்த
த க பாடசாலை

| | |
|---|---|
| ஐ தே க | 32 |
| த வி க | 835 |
| கம்யூனிஸ்ட் | 19 |
| த காங்கிரஸ் | 118 |
| மொத்தம் | 1004 |
| கழிவு | 05 |

33 இல: யு
அரியாலை
சனசமூகநிலையம்
புங்கன்குளம்

| | |
|---|---|
| ஐ தே க | 20 |
| த வி கூ | 698 |
| கம்யூனிஸ்ட் | 05 |
| த. காங்கிரஸ் | 59 |
| மொத்தம் | 777 |
| கழிவு | இல்லை |

34. இல: ஐ
பத்திரிசியார்
நிறுவனம்

| | |
|---|---|
| ஐ தேக | 94 |
| த வி கூ | 520 |
| கம்யூனிஸ்ட் | 25 |
| த காங்கிரஸ் | 77 |
| மொத்தம் | 716 |
| கழிவு | 01 |

35. இல: டபிள்யு
வண்ணார்பண்ணை
மேற்கு முஸ்லிம்
கலவன் பாடசாலை

| | |
|---|---|
| ஐ தே க | 413 |
| த வி கூ | 339 |
| கம்யூனிஸ்ட் | 14 |
| த காங்கிரஸ் | 242 |
| மொத்தம் | 1009 |
| கழிவு | 01 |

36. இல: பி
புனித ஜோன்
பொஸ்கோ த. க.
பாடசாலை

| | |
|---|---|
| ஐ தே க | 46 |
| த வி கூ | 705 |
| கம்யூனிஸ்ட் | 10 |
| த காங்கிரஸ் | 165 |
| மொத்தம் | 927 |
| கழிவு | 01 |

37. இல: ஜி
யாழ். புனித சாள்ஸ்
மகாவித்தியாலயம்

| | |
|---|---|
| ஐ தே க | 71 |
| த வி கூ | 523 |
| கம்யூனிஸ்ட் | 34 |
| த காங்கிரஸ் | 185 |
| மொத்தம் | 813 |
| கழிவு | 05 |

38. இல: ஆர்.
இலங்கை ஆயுள்வேத
வைத்தியக்கல்லூரி

| | |
|---|---|
| ஐ தே க | 181 |
| த வி கூ | 618 |
| கம்யூனிஸ்ட் | 36 |
| த காங்கிரஸ் | 106 |
| மொத்தம் | 946 |
| கழிவு | 05 |

39. இல: வை
ஒஸ்மானியாக் கல்லூரி

| | |
|---|---|
| ஐ தே க | 435 |
| த வி கூ | 351 |
| கம்யூனிஸ்ட் | 07 |
| த காங்கிரஸ் | 200 |
| மொத்தம் | 993 |
| கழிவு | 07 |

(6ம் பக்கம் பார்க்க)

## ஏழாலை மேற்கு மின்னொளியில் உதைபந்தாட்டம்

(தெல்லிப்பழை)

ஏழாலை வடக்கு கலாநிதி சனசமூகநிலையத்தின் கலாநிதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடாத்தும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மோதும் கழகங்கள்;

6 பேர் போட்டியில் உதயதாரகை 'பி' வி. கவுடன் சிவன் வி. க வும் 4 பேர் போட்டியில் ஐக்கிய வி க வுடன் அல்ஹறா வி கவும். நாலாய மோதலில் 6 பேர் போட்டியில் ஜனசக்தி வி க வுடன் மக்கள் வி கவும் சர்வோதய வி கவுடன் ஸ்ரீவிநாயகர் வி கவும் 4 பேர் போட்டியில் இளங்கோ வி க வுடன் ராஜன் வி கவும் பங்குபற்றுகின்றன.

'செற் அப்' ஆட்டத்தில் மோகனதாஸ் எதிர் சரஸ்வதி வி கவும், மோகனதாஸ் எதிர் காரைநகர் கடற்படை வீரர்கள்.

# "இதிகாச காலந்தொட்டு இன்றுவரை வரலாற்றுப் பெருமைகொண்ட நாடு ஈழம்"

## தமது பண்பாட்டுப் பயணம் பற்றி பேராசிரியர் டாக்டர் ஆறு. அழகப்பன்



அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில், தமிழ் இணைப் பேராசிரியராக 19 ஆண்டுகளாகப் பணியாற்றும் டாக்டர் ஆறு. அழகப்பன் பல துறைகளிலும் ஓய்வு எதுவுமின்றி உழைத்து வருகிறார். 1978ம் ஆண்டு 40நாட்கள் மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் கலை, சமய, இலக்கியச் சொற்பொழிவுகள் மேற்கொண்ட பொழுது இங்கை வாழ் தமிழர்கள் 'கலைக்காவலர்' என்ற பட்டத்தினை இவருக்கு வழங்கினர். 'கலைக்காவலர்' டாக்டர் ஆறு அழகப்பன் தமிழ்இணைப் பேராசிரியர் என்ற வரம்பிற்குள் மட்டுமன்றி, நாடறிந்த நல்ல நாடக ஆசிரியராகவும் ஆய்வாளராகவும், சொற்பொழிவாளராகவும் பல்வேறு நிலையங்களின் இயக்குனராகவும் நற்பணியாற்றி வருகிறார்.

பேட்டி: திருமதி பூரணம் ஏனுதிநாதன்

கடந்தவாரம் யாழ் நகருக்கு பேராசிரியர் வருகை தந்திருந்தபோது அவரை நாம் பேட்டி கண்டோம். பேட்டி விபரம் வருமாறு:

கேள்வி. சிறுவயது முதலே நாடகத்துறையில் உங்களுக்கு ஆர்வம் ஏற்பட்டதற்கு காரணமென்ன?

பதில்: ஒருவனுக்கு சோதிடத்தில் ஆர்வம் ஏற்படுவது, நாதஸ்வரம் வாசிப்பதில் ஆர்வம் ஏற்படுவது என்பதெல்லாம் ஆராய்ச்சிக்கு உரியதல்ல. இயற் கலையில் ஆறுமுக நாவலர், விபுலானந்தருக்கு ஏற்பட்டதுபோல, இசைக் கலையில் தண்டபாணி தேசிகருக்கு ஏற்பட்டதுபோல எனக்கும் இது படைப்போடு இயற்கையாக அமைந்திருக்கிறது என்றே கருதுகிறேன். வட்டிக்கடை வைத்து வரவு செலவு பார்த்து பணத்தை எப்படி வளர்க்கலாம் என்று ஆராயவேண்டிய நான், நாடகத்தை எப்படி வளர்க்கலாம் என்றல்லவா ஆராய்கிறேன் இது கலையில் ஒருவருக்கு ஏற்படும் ஆர்வம்; விபத்தல்ல. இறைவன் அளித்த கொடை.

கேள்வி: நாடகத்துறை வளர்ச்சிக்கு ஈழத்தில் பல் கலைக்கழகங்கள், ஆசிரியபயிற்சிக்கலாசாலைகள் எப்படியான பணிகளை மேற்கொள்ளலாம்!

பதில்: பரிதிமாற் கலைஞரின் "நாடக இயல்" நூலினைத் தொடர்ந்து பாடமாக வைத்துக்கொண்டால் போதுமானது, நாடகம் மெல்ல வளரும். பாடத்திட்டங்களில் புதிய நாடக நூல்களை இடம் பெறச்செய்யலாம். நாடகக் கருத்தரங்குகளும் விழாக்களும் நடத்தலாம்.

கேள்வி: ஆய்வுத்துறை விருத்தி பற்றி தங்கள் கருத்துக்கள் என்ன!

பதில்; ஆய்வுத்துறையில் வேகம் கூடாது. நிதானம் மிகவும் தேவை. பட்டத்திற்காக இப்பொழுது ஆராய்ச்சிகள் இருந்துவருகின்றன. மொழி வளர்ச்சிக்காகவும் ஆராய்ச்சியிலிருந்து ஓர் ஆராய்ச்சி தோன்றவேண்டும் என்ற நோக்கத்தோடு ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டும். சில ஆண்டுகள் மீண்டும் சங்க இலக்கியங்களை, காப்பியங்களை ஆராய்வதனை ஒத்திவைத்துவிட்டு, தொடாத படைப்பிலக்கியங்களை ஆராய வேண்டும். தமிழ் சொல்லிக் கொடுக்கும் எல்லாப் பல்கலைக் கழகங்களும் குறிப்பாக ஆராய்ச்சி நடாத்தும் பல் கலைக்கழகங்கள் ஆராயும் தலைப்புக்களை ஒருவருக்கொருவர் தெரிவித்துக்கொண்டு, ஒருவர் எடுத்த ஆராய்ச்சியை அடுத்தவர் எடுத்துத் தடுமாறுமல் அதற்குப் பதிலாக புதிய ஆராய்ச்சியை அடுத்தவர் எடுத்துத் தடுமாறுமல் அதற்குப் பதிலாக புதிய ஆராய்ச்சித் தலைப்புக்களை மேற்கொள்ளச் செய்யும் ஓர் ஒருமைப்பாட்டுத் திட்டமும் பல்கலைக்கழகங்களுக்கு மத்தியில் வேண்டும் அடுத்த பல்கலைக்கழகத்தில் யார் தமிழ்ப் பேராசிரியராக இருக்கிறார் என்று அறியாத பேராசிரியராக இல்லாமல் கலந்துரையாடி ஆராய்ச்சி மேற்கொள்ளவேண்டும். என்னுடைய பண்பாட்டுப் பயணத்தில் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் என்னென்ன ஆய்வுகள் நடக்கின்றன என்று அறியவும் உள்ளேன். இவ் வாய்வுகளே மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடப்பதைத் தவிர்க்கலாம்.

கேள்வி; தாங்கள் வேறு என்ன பணிகளை மேற்கொண்டுள்ளீர்கள்?

பதில்: கடந்த 10 ஆண்டுகளாகப் பல்கலைக்கழக வெளியீட்டுத்துறைக்குப் பொறுப்பாக இருக்கின்றேன். நான் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு 200 நூல்கள் வந்துள்ளன. எண்ணற்ற கலைநிகழ்ச்சிகளை ஆண்டுதோறும் நடத்தி வருகின்றோம். ஒவ்வொரு ஆகஸ்ட் 15லும் நாங்கள் மத்திய சிறைச்சாலைகளுக்குச் சென்று கைதிகளுக்கு நாடகம் நடத்திவருகின்றோம். ஆளுமை கல்விக்குழுக்களில் நான் ஒரு உறுப்பினர். பல்கலைக்கழகத் 'தென்றல்' விடுதியின் பாதுகாவலன். பல்கலைக்கழகத்தின் பல்வேறு குழுக்களிலும் நான் அங்கம் வகிக்கிறேன். ஒருவன் பணிமேற்றுக்கொண்ட எதனையும் நேசித்து இரண்டறக் கலந்து பாடுபட்டால் உரிய மரியாதை கிடைக்கும் என்பதனை அனுபவத்தில் காண்கிறேன்"

கேள்வி: இப்பணிகளையெல்லாம் மேற்கொள்ள உங்களுக்கு ஒய்விருக்கிறதா?

பதில்: அனைவரும் என்னைப் போல செய்யலாம, சினிமா டிக்கட் வாங்க 2 மணி நேரம் நிற்கிறான், உள்ளே சென்று 3 மணிநேரம் கெட்டுப் போகிறான். கடவுள் தரிசனம் என்று கால்கடுக்க நேரம் செலவழிக்கின்றான். அரசியல் கூட்டம் கேட்க 5, 6 மணித்தியாலங்களை ஒதுக்குகிறான். மரத்தடியிலும், குழாயடியிலும், சந்திகளிலும் கண்டதையெல்லாம் கதைக்கிறான் நான் இப்படிச் செய்யாததால் நேரம் கிடைக்கிறது.

கேள்வி: நாடகத்துறைக்கென ஒரு கல்லூரி வேண்டுமா?

பதில்: நாடகத் துறைக்கு தனிக்கல்லூரி வேண்டியதில்லை. கற்றுக்கொடுக்கும் பாடங்களை யெல்லாம் ஒரு துணைப்பாடமாக விருப்பப் பாடமாக வைத்துக்கொண்டால் போதுமானது.

கேள்வி: இலங்கைக்கு முதன் முதலாக வருகை தந்திருக்கும் தாங்கள் இலங்கை பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

பதில்: தவத்திரு ஆறுமுக நாவலர், விபுலானந்தர், யோகர்சுவாமி முதலிய அருளாளர்கள் அவதரித்த நாடு இலங்கை, நாயன்மார்கள் பாடிய பழைய புண்ணிய பூமி. தமிழ்அன்னையின் பாத மலராக விளங்கும் இந்நிலம் இயற்கையாலும் எழிலாலும் எவரையும் ஆட்கொள்ளும் சக்திவாய்ந்தது. இராமர் காதை மாணவர்களுக்குப் பாடம் நடாத்தியபொழுது இலங்கையைக் கற்பனையால் கண்டிருக்கிறேன். இன்று கண்டு மகிழ்கிறேன். இராமாயண சிதைக்கும் சிலப்பதிகார கண்ணகிக்கும் தொடர்புடைய நாடல்லவா இலங்கை. இதிகாச காலத்திலிருந்து இன்றுவரை வரலாற்றுப்பெருமை கொண்ட பெருநாடாகவே இலங்கை விளங்குகிறது.

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் சுந்தரம்

சண்டிருப்பாய் - கல்வளை மயில்வாகனம் சுந்தரம் 20-5-79 ஞாயிற்றுக்கிழமை தனது 101 ஆவது வயதில் காலமானார். அன்னார் தன்னிப்பிள்ளையின் கணவரும், காலஞ்சென்ற குமாரசாமி, ஏ. கே. எஸ். நகை மாளிகை ஸ்தாபனத்தின் முகாமையாளர் திரு. சிவநேசன், மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை அதிபர் திரு. கந்தசாமி, காலஞ்சென்ற திருமதி விசாலாட்சி அம்பலவாணர், திருமதி பரமேஸ்வரி இராசரத்தினம், திரு. வன்னியசிங்கம் ஆகியோரின் தந்தையும், திருமதி புவனேஸ்வரி சிவநேசன், திருமதி அமரகுலேஸ்வரி கந்தசாமி, இளைப்பாறிய புகையிரதப்பகுதி திரு. அம்பலவாணர், புன்னாலைக்கட்டுவன் இராசன் மில்ஸ் உரிமையாளர் திரு. இராசரத்தினம் ஆகியோரது மாமனாரும், கல்வளை சேயோன் - முகாமையாளர் மக்கள் வங்கி வாழைச்சேனை, திருமதி ரோகிணி பாலகிருஷ்ணன், திருமதி புஸ்பராணி தில்லைநாதன், செல்வி விஜயலட்சுமி, சற்குண சேயோன், ஜெயகுண சேயோன், திருமதி மாதுசிரோன்மணி சகாதேவன், பிரான்ஸ் திருமதிசிவனேஸ்வரி யோகானந்தன், திருமதி இராசேஸ்வரி முத்துக்குமாரசாமி, திருமதி பத்மினி இராசேந்திரா, திருமதி வனிதா தர்மலிங்கம், இலங்கை வங்கி கொழும்பு திரு. சிவகுமாரன், சாவித்திரி, தமயந்தி. சத்தியசீலதேவன், லண்டன் ஜெயசீலன், இரவீந்திரன், கௌரி, தயாபரி, பவானி பத்மாசனி, ரோயல் கல்லூரி ஆசிரியர் திரு பாலச்சந்திரன், பாலமெகனாதரன், திருமதி ரேணுகா சிறீஸ்காந்தராசன், செல்வி சாந்தினி, லண்டன் பொறியியலாளர் வரதராசன், லண்டன் திருமதி வனசா இராமலிங்கம், வாசுகி பாலச்சந்திரன், சிங்கப்பூர் திருமதி வத்சலா கருணாகரன், வசந்தி, வளர்மதி, வாமசக்தி ஆகியோரது பேரனும், சிவாகரன் மாலதி, கமலி. நிஸ்மலா. இவாஜினி, முரளீதரன், பிரணவன், சிறீகாந்த், சிவப்பிரியா, சிவதர்மினி, சிவதாரிணி, சிவதர்சினி, சயந்தன், சிவந்தன், சர்மிளா, சுபாசினி, சஜானி ஆகியோரது பூட்டனுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று 21-5-79 திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் கல்வளை சண்டிருப்பாயில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். 2508

## அண்ணாமலைப் பல்கலைக்கழக பொன்விழா

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் ஆறு அழகப்பன் அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் இலங்கை மாணவர்களுக்கு விடுத்துள்ள செய்தியில்;

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொன்விழா விரைவில் நடைபெறவிருக்கிறது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கும் அதே நேரத்தில், பொன்விழா அழைப்பினைத் தனித்தனியாக அனுப்பும் வகையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்த இலங்கை மாணவர்கள் அனைவரும் தமது சரியான முகவரியை தமக்கு டாக்டர் ஆறு அழகப்பன், வை எம் சி ஏ சண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு உடன் அனுப்ப வேண்டுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## யாழ். மாவட்ட...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

### 40. இல: எச். யாழ். கன்னியர்மடம் த ம வித்தியாலயம்

| | |
|---|---|
| ஐ தே க | 45 |
| த வி கூ | 683 |
| கம்யூனிஸ்ட் | 15 |
| த காங்கிரஸ் | 345 |
| மொத்தம் | 1088 |
| கழிவு | 03 |

### 41. இல: கியூ யாழ். புனிதஜோன்ஸ் கல்லூரி

| | |
|---|---|
| ஐ தே க | 45 |
| த வி கூ | 519 |
| கம்யூனிஸ்ட் | 04 |
| த காங்கிரஸ் | 130 |
| மொத்தம் | 698 |
| கழிவு | 03 |

### 42. இல:எஸ் இலங்கைப் புகையிலைக் கூட்டுத்தாபனம் ஆஸ்பத்திரிவீதி

| | |
|---|---|
| ஐ தே க | 91 |
| த வி கூ | 696 |
| கம்யூனிஸ்ட் | 10 |
| த காங்கிரஸ் | 180 |
| மொத்தம் | 996 |
| கழிவு | 02 |

### 43 இல: வைத்தீஸ்வரக்கல்லூரி

| | |
|---|---|
| ஐ தே க | 79 |
| த வி கூ | 950 |
| கம்யூனிஸ்ட் | 36 |
| த காங்கிரஸ் | 166 |
| மொத்தம் | |
| கழிவு | |

[இவை யாவும் உத்தியோகப் பற்றற்றவை — ஆர்]

## திருவிழா

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீச்சரப்பெருமான் திருக்கோயில மகோற்சவவிழா இம்மாதம் 30ம் திகதி புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

வைகாசி விசாகத்தன்று தீர்த்தோற்சவமும். வைகாசி 7-ம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் நடைபெறும்.

## இன்றைய விரிவுரை

[யாழ்ப்பாணம்]

இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாகத்தில் இன்று மாலை தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு. கே. கைலாசபதி 'அல்லாமா இக்பாலின் மனிதாயுதம்' என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார்.

வளாக வரலாற்றுத்துறைக் கருத்தரங்கு மண்டபத்தில் இடம்பெறும் இக் கருத் கருத்தரங்கை அரபு இஸ்லாமிய நாகரீகத்துறையினர் ஒழுங்குசெய்துள்ளனர். [கொ]

## இந்திரா...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டது' என்று குறிப்பிட்ட திரு. சுவாமிநாதன், 'தமிழக முதலமைச்சர், பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயையும் சந்தித்திருந்தார். பிரதமரைச் சந்தித்தபின்னர், முதல்வர் எம். ஜி. ஆர். நிலைமையில் மாற்றம் காணப்பட்டது' என்று கூறியபோது, பத்திரிகை நிருபர்கள் இதற்கு என்ன காரணமாக இருக்கலாம்?' என்று கேட்டபோது இதற்கு விளக்கமளிக்க திரு. சுவாமிநாதன் மறுத்து விட்டார்

தமிழக முதல்வர் நேற்று சென்னை திரும்பியபோது நிருபர்கள் இதுபற்றிக் கேட்டதற்கு, தஞ்சையில் திருமதி இந்திரா காந்தி போட்டியிடுவது பற்றி எனக்கொன்றும் தெரியாது' என்று தெரிவித்தார்.

தஞ்சை, நாகபட்டினம் இடைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் கடைசிநாள் இம் மாதம் 23-ம் திகதி ஆகும்.

## ஐ. தே. கவின்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நின்ற போதிலும், நாம் வெற்றி பெற்றிருப்பது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது. ஐக்கிய தேசியக்கட்சி யாழ்ப்பாணத்தில் தோல்வி பெற்றது எமக்கு மகிழ்ச்சிதரும் செய்தியாகவிருந்த போதிலும், பருத்தித்துறையிலும், சாவகச்சேரியிலும், வவுனியாவிலும் ஒரிரு இடங்களை இக்கட்சி பெற்றுக் கொண்டது மிகுந்த கவலை அளிக்கிறது'. என்றும் திரு. குமார் பொன்னம்பலம் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

## நாவாந்துறை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. சோ. சிவரத்தினமும் சென்று பார்வையிட்டனர்.

### கரையூரில்

நேற்று நண்பகல் 2 மணியளவில் கரையூரிலும் இரு கட்சி ஆதரவாளர்களுக்கிடையே மோதல்ஏற்பட்டது. கரையூரைச் சேர்ந்த சிலர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். [கா]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மே மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Reegistered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8943/79 The Eelanaadu P B No: 49; Telegrams Eelanaad Telex 888.